IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.44/2021
DEPOSITION OF WITNESS (PW1)

வா.சா. 1 சாட்சி நூருல்ஹக் த.பெ. அசனார்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 04.01.2025 in accordance with the provisions of Act XX141.**

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. தாவா சொத்தின் புல எண்27/6ல் எனது தந்தை 6 செண்டை 7.2.1981ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி புல எண்ணில் தெற்கே 2 1/2 செண்டை எனது சிறியதாய் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவாச் சொத்திற்கு கிழக்கே நெல் அரைக்கும் மில் உள்ளது என்றால் தற்போது தான் உள்ளது. மேற்படி மில்லிற்கு கிழக்கே அடுத்ததாக வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல, பாதைதான் உள்ளது.

2. மேற்படி மில்லிற்கு கிழக்கே வீடுகள் உள்ளதை மறைத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்திற்கு தெற்கே களம் உள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்திற்கு மேற்கே காத்தவாரயன் கோவில் இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி களமானது சர்வே எண் 27/6ஐ தவிர்த்து கூடுதலாக கோவில் நிலத்தில் அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி களத்திற்கு மேற்கே நான் பட்டறை வைத்துள்ளேன் என்றால் சரிதான். எனது உடன் பிறந்த சகோதரர்கள் சேக்மைதின் (எ)செல்லத்துரை மற்றும் காதர்மைதின் ஆகியோர் திருமங்கலம் கீழபள்ளிவாசல் தெருவில்

குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் குடியிருக்கும் இடம் எனது தந்தை 7.9.1977ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி வீடு இரண்டு பகுதிகளாக உள்ளது என்றால் சரிதான்.

4. எனது தந்தை இறக்கும்வரை எனது சிறியதாயார் குடும்பத்துடன்தான் சேர்ந்து இருந்தார் என்றால் சரிதான். எனது தந்தை உயிருடன் இருக்கும்போது நாங்கள் அனைவரும் ஒன்றாக தொழில்செய்தோம் என்றால் சரிதான். எனக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 1993 ஆகும். எனது மகனை நான் கூட்டுக்குடும்ப வருமானத்தில்தான் படிக்க வைத்தேன் என்றால் சரியல்ல.

5. நான் குடியிருந்த வீடு எந்த தெருவில் உள்ளது என்றால் மீனாட்சி தியேட்டருக்கு தென்புறம் உள்ளது. மேற்படி சொத்தை எனது தந்தையார்தான் எனது பெயரில் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை வாங்குவதற்கு எனது தந்தை தாவாச் சொத்தில் உள்ள 6செண்டை திருமங்கலம் கூட்டுறவு நகர வங்கியில் அடமானம் வைத்துதான் வாங்கினார் என்றால் சரியல்ல.

6. அவர் மேலும் கடன் வாங்கிதான் எனக்கு வீடு கட்டித்தந்தார் என்றால் சரியல்ல. மேற்படி கடனை எனது தந்தைதான் 2009 வரை செலுத்தி பத்திரத்தை திருப்பினார் என்றால் சரியல்ல. எனது தந்தை எழுதி வைத்த உயில் பற்றிய விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2019ல் தெரிய வந்தது. 1, 2 பிரதிவாதிகளின் தாயார் எப்போது இறந்தார் என்றால் 2017 ஆகும்.

7. எனது தந்தையார் 7.2.2007ல் எழுதிவைத்த உயில் தேதி அன்றே ஹமிதாபீவியும் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை 1, 2 பிரதிவாதிகளுக்கு

உயில் எழுதிவைத்தார் என்றால் எனக்கு தெரியாது. ஹமிதாபீவி இறந்த பிறகு 1, 2 பிரதிவாதிகள் தங்களுக்கு உயில் மூலம் கிடைத்த சொத்துக்களை பதிவு பெற்ற பாகப்பத்திரத்தின் மூலம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது.

8. மேற்படி பாகப்பத்திரப்படி 1, 2பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்து உள்பட தனித்தனி பட்டா வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை எழுதிவைத்த உயிலில் எனது உடன் பிறந்த சகோதரர்கள் வசித்து வரும் கீழப்பள்ளிவாசல் தெருவின் வீட்டினை Aஅட்டவணை பாகமாக அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது.

9. எனது தந்தை எழுதிவைத்த உயிலை எனது உடன்பிறந்த சகோதரர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனது சகோதரர்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவாச் சொத்தின் மின்இணைப்பு எனது தந்தை பெயரில் இருந்தது என்றால் சரிதான். மின்இணைப்பை அனைத்து வாரிசுகளின் சம்மதகையொப்பம் பெற்று எனது பெயருக்கு மாற்றிக்கொண்டேன் என்று எனது பிராதில் தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்மத பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் மின்சார வாரியத்தில் கொடுத்து விட்டேன் என்வசம் இல்லை.

10. தற்போது தாவாச் சொத்திற்குரிய மின்கட்டணம் மற்றும் வீட்டுவரி இரசீது பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றும், தற்போது மின்கட்டணம் மற்றும் வீட்டுவரி பிரதிவாதி செலுத்து வருகிறார் என்றாலும் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால்

2007, 2009 ஆகும். எனது தந்தையின் முன்னிலையில்தான் திருமணம் நடைபெற்றது என்றால் எனது தந்தைக்கு மனநிலை சரியில்லை என்பதால் என் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது.

11. மேற்படி காலகட்டத்தில் எனது தந்தை வங்கியில் பெற்ற கடனை செலுத்தி செல்ரசீது பெற்றுள்ள நிலையில் எனது தந்தைக்கு மனநிலை சரியில்லை என்று நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பெயரில் இடம் வாங்கி எனது தந்தை கட்டிய வீட்டைதான் அவர் உயில் B அட்டவணை பாகமாக எனக்கு ஒதுக்கியுள்ளார் என்றால் சரியல்ல.

12. நான் பொய்யான ஆவணங்களின் மூலம் எனது தந்தையாருக்கு மனநிலை சரியில்லை என்று நிரூபிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

எனது உடன் பிறந்த சகோதரர்களே உயிலை ஏற்றுக்கொண்டனர் என்றும், என் பெயரில் எனது தந்தையார் இடம்வாங்கி வீடு கட்டி கொடுத்ததை எனக்கு சாதகமாக பயன்படுத்தி பிரதிவாதிகளுக்குரிய பங்கை அபகரிக்க முயற்சிசெய்கிறேன் என்றால் சரியல்ல.

13. நான் பிராதில் கூறியுள்ளவாறு தாவாச் சொத்திற்கு வாடகையினை எனது சிறியதாயாருக்கு செலுத்தி வந்தேன் என்று சொல்வது சரிஎன்றால் சரியல்ல. சட்டத்திற்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்ட உயிலின் மூலம் 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்த சொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் சட்டத்திற்கு புறம்பாக அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்துகொண்டு காலிசெய்ய மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

14. என்னை சட்டப்படியாக தாவாச் சொத்திலிருந்து காலிசெய்யவேண்டி பிராது தாக்கல் செய்த நிலையில் பிரதிவாதி தரப்பில் என்னை சட்டப்படி காலிசெய்யவேண்டி எதிர்கோரிக்கை தாக்கல் செய்த நிலையில் எனது பிராது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை 1ம்பிரதிவாதி வசம் ஒப்படைக்க நான் கடமைபட்டவன் என்றால் சரியல்ல. எனது பட்டறையில் இருந்து வரும் இரும்புதுகள்கள் களத்தில் வேலை செய்யும் ஆட்களை காயப்படுத்துகிறது என்றால் நான் மாவுமில்தான் வைத்துள்ளேன். நான் விறகு அடுப்பு செய்கிறேன்.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.